4904



ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව / முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved]

**ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව**
**இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்**
**Department of Examinations, Sri Lanka**

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (උසස් පෙළ) විභාගය, 2023 (2024)
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தர)ப் பரீட்சை, 2023 (2024)
General Certificate of Education (Adv. Level) Examination, 2023 (2024)

| | | | |
|---|---|---|---|
| කෘෂි විද්‍යාව<br>விவசாய விஞ்ஞானம்<br>Agricultural Science | I (විශේෂ විභාගය)<br>I (விசேட பரீட்சை)<br>I (Special Exam) | **08 T I** | පැය දෙකයි<br>***இரண்டு மணித்தியாலம்***<br>*Two hours* |

**அறிவுறுத்தல்கள் :**

- ※ எல்லா வினாக்களுக்கும் விடை எழுதுக.
- ※ விடைத்தாளில் தரப்பட்டுள்ள இடத்தில் உமது **சுட்டெண்ணை** எழுதுக.
- ※ விடைத்தாளின் மறுபக்கத்தில் தரப்பட்டுள்ள அறிவுறுத்தல்களைக் கவனமாக வாசித்துப் பின்பற்றுக.
- ※ **1** தொடக்கம் **50** வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றுக்கும் (1), (2), (3), (4), (5) என இலக்கமிடப்பட்ட விடைகளில் **சரியான** அல்லது **மிகப் பொருத்தமான** விடையைத் தெரிந்தெடுத்து, **அதனைக் குறித்து நிற்கும் இலக்கத்தைத் தரப்பட்டுள்ள அறிவுறுத்தல்களுக்கு அமைய விடைத்தாளில் புள்ளடி (×) இடுவதன்** மூலம் காட்டுக.

**1.** மென்வைரத் தண்டுத்துண்டங்கள் மூலம் இனப்பெருக்கம் செய்யக்கூடிய தாவரத்துக்கான ஓர் உதாரணம்
(1) ரோசா (2) குரோட்டன் (3) மரவள்ளி
(4) கிளிரிசிடியா (5) வத்தாளை

**2.** தாழ்நாட்டு உலர் வலயத்திற்கு மிகப் பொருத்தமான பாத்தி நாற்றுமேடை வகை / வகைகள்
(1) சமதளப் பாத்தி (2) தாழ் பாத்தி (3) உயர் பாத்தி
(4) தாழ் பாத்தியும் உயர் பாத்தியும் (5) உயர் பாத்தியும் சமதளப் பாத்தியும்

**3.** வயல் நிலங்களில் நீர் வடிப்பை மேம்படுத்துவதற்காக **மிகவும் அரிதாகப்** பயன்படுத்தப்படும் நீர்வடிப்பு முறை
(1) திறந்த வடிகால்
(2) கற்களாலான வடிகால்
(3) துளைகள் கொண்ட குழாய்கள்
(4) நீரைப் பம்புதல்
(5) உயர் ஆவியுயிர்ப்பு வீதத்தைக் கொண்ட பயிர்களைப் பயிரிடுதல்

**4.** பிளான்சிங் (Blanching) செயன்முறையின்போது சோடியம் மெற்றாஇருசல்பைட்டு பயன்படுத்தப்படுவது
(1) உணவைக் கிருமியழிக்கச் செய்வதற்காகும்.
(2) நொதியங்களை செயலிழக்கச் செய்வதற்காகும்.
(3) நிறத்தைப் பதிப்பதற்காகும்.
(4) மணத்தை (flavour) மேம்படுத்துவதற்காகும்.
(5) இழையமைப்பை மேம்படுத்துவதற்காகும்.

**5.** இலங்கையின் பாற்பசு வளர்ப்பிற்கான மிகப் பொருத்தமான காலநிலை நிலைமைகள் காணப்படுவது,
(1) தென்னை முக்கோணிப் பிரதேசத்திலாகும்.
(2) உலர் வலயத்திலாகும்.
(3) மலை நாட்டிலாகும்.
(4) இடை நாட்டிலாகும்.
(5) தாழ் நாட்டிலாகும்.

**6.** அதிகளவிலான அறுவடைக்குப் பிந்திய இழப்பு காணப்படுவது
(1) பீற்றூட்டில் ஆகும். (2) பப்பாசியில் ஆகும். (3) போஞ்சியில் ஆகும்.
(4) அன்னாசியில் ஆகும். (5) உருளைக்கிழங்கில் ஆகும்.

**7.** ஒரு பயிர்ச்செய்கையில் உச்ச அளவிலான நீர்ப் பயன்பாட்டு வினைத்திறனைப் பெற்றுக்கொள்ளக் கூடியதாக இருப்பது
(1) நிரல் நீர்ப்பாசனத்தினூடாக ஆகும். (2) தூவல் நீர்ப்பாசனத்தினூடாக ஆகும்.
(3) துளி நீர்ப்பாசனத்தினூடாக ஆகும். (4) பாத்திமுறை நீர்ப்பாசனத்தினூடாக ஆகும்.
(5) சால் நீர்ப்பாசனத்தினூடாக ஆகும்.

[பக். 2 ஐப் பார்க்க

**8.** அதிக சோடியமுள்ள (sodic) மண்ணில், பரிமாற்றமடையக்கூடிய சோடியத்தின் சதவீதம் (ESP%)
(1) 8 (2) 10 (3) 12 (4) 14 (5) 16

● வினா இல. **9** இற்கு விடையளிப்பதற்குப் பின்வரும் வரிப்படத்தைப் பயன்படுத்துக.



P



Q

**9.** மேலுள்ள வரிப்படத்தில் P, Q எனக் காட்டப்பட்டிருப்பவை முறையே,
(1) வேர்த் துண்டங்கள், தண்டுத் துண்டங்கள் என்பன மூலம் இடம்பெறும் தாவர இனப்பெருக்கம் ஆகும்.
(2) வேர்த் துண்டங்கள், ஓடிகள் என்பன மூலம் இடம்பெறும் தாவர இனப்பெருக்கம் ஆகும்.
(3) தரைப் பதிவைத்தல், தண்டுத் துண்டங்கள் என்பன மூலம் இடம்பெறும் தாவர இனப்பெருக்கம் ஆகும்.
(4) கும்பிப் பதிவைத்தல், ஓடிகள் என்பன மூலம் இடம்பெறும் தாவர இனப்பெருக்கம் ஆகும்.
(5) வேர்த் தண்டுகள், ஓடிகள் என்பன மூலம் இடம்பெறும் தாவர இனப்பெருக்கம் ஆகும்.

**10.** கிளைபொசேற்று ஒரு
(1) தொகுதி, தேர்வு, வெளிப்பட முன்னரான களைநாசினி ஆகும்.
(2) தொடுகை, தேர்வு, வெளிப்பட முன்னரான களைநாசினி ஆகும்.
(3) தொகுதி, தேர்வு, வெளிப்பட்ட பின்னரான களைநாசினி ஆகும்.
(4) தொடுகை, தேர்வு அல்லாத, வெளிப்பட முன்னரான களைநாசினி ஆகும்.
(5) தொகுதி, தேர்வு அல்லாத, வெளிப்பட்ட பின்னரான களைநாசினி ஆகும்.

**11.** காப்பு விவசாயத்தில் பயன்படுத்தப்படும் ஒரு நுட்பமுறையானது
(1) மானாவாரி விவசாயம்
(2) இரசாயனப் பசளைகளைப் பயன்படுத்துதல்
(3) சமவுயரக்கோட்டிற்கு அமைய பயிர்ச்செய்கை மேற்கொள்ளல்
(4) செறிவுமுறை விவசாயம்
(5) மண்ணின்றிய பயிர்ச்செய்கை

**12.** மாட்டின் சிக்கலான இரைப்பையினுள் உணவு பயணிக்கும் சரியான பாதை
(1) சிறுவலை → அசையூண் வயிறு → சமிக்கும் இரைப்பை
(2) அசையூண் வயிறு → சமிக்கும் இரைப்பை → சிறுவலை
(3) அசையூண் வயிறு → துந்தம் → சிறுவலை
(4) அசையூண் வயிறு → சிறுவலை → துந்தம்
(5) சிறுவலை → அசையூண் வயிறு → துந்தம்

**13.** தூவல் நீர்ப்பாசனம், துளி நீர்ப்பாசனம் என்பவற்றுடன் தொடர்பான மூன்று கூற்றுகள் கீழே தரப்பட்டுள்ளன.
A - இந்த இரண்டு முறைகளுக்கும் சமமான நீர் அமுக்கம் தேவைப்படும்.
B - மண்ணின் மேற்பரப்பில் நீர் வடிந்தோடாத காரணத்தால் மண்ணரிப்பு இழிவளவாக்கப்படும்.
C - இவ் இரண்டு முறைகளும் எந்தவொரு நில வேறுபாட்டு நிலைமையிலும் (topography) பயன்படுத்தக் கூடியதாகும்.

மேற்குறிப்பிட்டவற்றுள் சரியான கூற்று / கூற்றுகள்
(1) A மாத்திரம் (2) B மாத்திரம் (3) C மாத்திரம்
(4) A, B ஆகியன மாத்திரம் (5) B, C ஆகியன மாத்திரம்

[பக். 3 ஐப் பார்க்க

අ.පො.ස උසස් පෙළ සියලුම විෂයන්ට අදාල ප්‍රශ්න පත්‍ර/පිළිතුරු පත්‍ර/සටහන් ලබා ගැනීමට Past Papers Wiki වෙත පිවිසෙන්න

**14.** தாவர சுவாச வீதத்திற்கும் வெப்பநிலைக்கும் இடையிலான தொடர்பை விளக்கும் வரைபு

(1)



(2)



(3)



(4)



(5)



**15.** துணைநிலை உணவுப் பொதியிடலுக்கான ஓர் உதாரணம்
(1) பால்மா பைக்கெற்றின் காட்போட் உறை
(2) பட்டர் சுற்றப்பட்டுள்ள அலுமினிய மேலுறை
(3) அப்பிள் பழம் சுற்றப்பட்டுள்ள ஸ்ரைரோபோம் உறை
(4) மிளகாய் தூளின் பொலித்தீன் பைக்கெற்று
(5) திரவப் பாலைப் பொதியிடப் பயன்படும் டெட்ரா உறை

**16.** பாதுகாக்கப்பட்ட மனைகளில் மறைப்பிடப் பயன்படுத்தப்படும் சில பொருட்கள் கீழே தரப்பட்டுள்ளன.
A - பூச்சிப் பாதுகாப்பு வலை
B - புற ஊதாக் (UV) கதிர்த் தடுப்புப் பொலித்தீன்
C - அதிக அடர்த்தி கொண்ட பொலித்தீன்
மேற்குறிப்பிடப்பட்ட பொருட்களில் தாழ்நாட்டு ஈரவலயத்திலுள்ள ஓர் பாதுகாக்கப்பட்ட மனைக்கு மிகப் பொருத்தமான மறைப்புப் பொருளாக அமைவது
(1) A மாத்திரம் (2) B மாத்திரம் (3) C மாத்திரம்
(4) A, B ஆகியன மாத்திரம் (5) A, C ஆகியன மாத்திரம்

**17.** விவசாய வானிலை அலகு ஒன்றில் வெவ்வேறு வானிலைப் பரமானங்களின் வாசிப்புகளைப் பெற்றுக்கொள்ளும் தடவைகளின் எண்ணிக்கை ஒவ்வொரு பரமானத்துக்கும் ஏற்ப வேறுபடும். மழைவீழ்ச்சி தரவுகளைப் பெற்றுக்கொள்வது இடம்பெறுவது
(1) தினமும் மு.ப. 8.30 க்கு ஆகும்.
(2) தினமும் பி.ப. 3.30 க்கு ஆகும்.
(3) ஒவ்வொரு மழையும் முடிந்தவுடன் ஆகும்.
(4) தினமும் மு.ப. 8.30 க்கும் பி.ப. 3.30 க்கும் ஆகும்.
(5) ஒவ்வொரு மழைக்காலமும் முடிந்த பின்னர் ஆகும்.

[பக். 4 ஐப் பார்க்க

**18.** பாறைகளில் பௌதீக வானிலையாலழிதல் இடம்பெறுவது
(1) அமில நிலைமைகளில் முருகைக்கற் பாறைகள் கரையும் போதாகும்.
(2) கடலலைகள் மோதுவதால் கடற்கரையை அண்மித்த கற்பாறைகள் சிறு துண்டுகளாக உடையும் போதாகும்.
(3) அமில மழை காரணமாக சிலைகள் கரையும் போதாகும்.
(4) மண் புழுக்களால் மண்ணில் துளைகள் தோண்டப்படும் போதாகும்.
(5) பாறைகளில் காணப்படும் நீரிற் கரையும் பகுதிகள் மழை நீரில் கரையும் போதாகும்.

**19.** நிலம் பண்படுத்தல் மூலம் மண்ணின்
(1) காற்றூட்டம், தோற்ற அடர்த்தி என்பன குறைவடையும்.
(2) நீர் பற்றுந்திறன், காற்றூட்டம் என்பன குறைவடையும்.
(3) நுண்துளைத் தன்மை, நுண்ணங்கிகளின் தொழிற்பாடு என்பன குறைவடையும்.
(4) காற்றூட்டம் அதிகரிக்கப்படும் அதேவேளை தோற்ற அடர்த்தி குறைவடையும்.
(5) தோற்ற அடர்த்தி அதிகரிக்கப்படும் அதேவேளை நீர் பற்றுந்திறன் குறைவடையும்.

**20.** இலங்கையில் தமது தலைமையகத்தைக் கொண்டுள்ள ஒரு சர்வதேச நிறுவனம்
(1) உணவு விவசாயத் தாபனம் (FAO)
(2) உலக உணவு நிகழ்ச்சித்திட்டம் (WFP)
(3) சர்வதேச நெல் ஆராய்ச்சி நிறுவனம் (IRRI)
(4) சர்வதேச நீர் முகாமைத்துவ நிறுவனம் (IWMI)
(5) சர்வதேச உணவுக் கொள்கை ஆராய்ச்சி நிறுவனம் (IFPRI)

**21.** தாவர இனப்பெருக்கம் தொடர்பான மூன்று கூற்றுகள் பின்வருமாறு.
A - நுண் இனப்பெருக்கமானது ஒரு பதியமுறை இனப்பெருக்க முறையாகக் **கருதப்படமாட்டாது**.
B - தண்டுத் துண்டங்கள் மூலம் இனப்பெருக்கம் செய்வதனூடாக பிறப்புரிமைரீதியில் ஒத்த தாவரங்கள் உற்பத்தியாகின்றன.
C - வித்து இனப்பெருக்கத்தினால் பெறப்படும் தாவரங்கள், பதியமுறை இனப்பெருக்கத்தினால் பெறப்படும் தாவரங்களைக் காட்டிலும் விரைவாக முதிர்ச்சியடையும்.

மேற்குறித்த கூற்றுகளில் சரியானது / சரியானவை
(1) A மாத்திரம் (2) B மாத்திரம் (3) C மாத்திரம்
(4) A, B ஆகியன மாத்திரம் (5) B, C ஆகியன மாத்திரம்

**22.** பசுவின் சராசரி வேட்கைக் காலம்
(1) 12 மணித்தியாலங்கள் (2) 18 மணித்தியாலங்கள்
(3) 24 மணித்தியாலங்கள் (4) 2 - 3 நாட்கள்
(5) 3 - 4 நாட்கள்

**23.** புவி - வளிமண்டல முறைமையின் தொடர்ச்சியான நீர் சுற்றோட்டமானது, நீர் வட்டத்தினூடாகத் தொடர்புபட்டுள்ளது. இச்செயன்முறையின் சரியான ஒழுங்குமுறை
(1) ஒடுங்கல், ஆவியாதலும் ஆவியுயிர்ப்பும், படிவுவீழ்ச்சி, மேற்பரப்பில் ஓடிவழிதலும் ஊடுவடிதலும்
(2) ஆவியாதலும் ஆவியுயிர்ப்பும், ஒடுங்கல், படிவுவீழ்ச்சி, மேற்பரப்பில் ஓடிவழிதலும் ஊடுவடிதலும்
(3) மேற்பரப்பில் ஓடிவழிதலும் ஊடுவடிதலும், ஆவியாதலும் ஆவியுயிர்ப்பும், படிவுவீழ்ச்சி, ஒடுங்கல்
(4) படிவுவீழ்ச்சி, ஆவியாதலும் ஆவியுயிர்ப்பும், ஒடுங்கல், மேற்பரப்பில் ஓடிவழிதலும் ஊடுவடிதலும்
(5) படிவுவீழ்ச்சி, ஒடுங்கல், மேற்பரப்பில் ஓடிவழிதலும் ஊடுவடிதலும், ஆவியாதலும் ஆவியுயிர்ப்பும்

**24.** தாவரங்களுக்குத் தேவையான சில அத்தியாவசிய நுண்போசணைக் கூறுகள்
(1) Mg, Cu, Zn (2) Mn, Mo, H (3) Cu, Zn, H
(4) Fe, Zn, Mn (5) Fe, Zn, Ti

අ.පො.ස උසස් පෙළ සියලුම විෂයන්ට අදාළ ප්‍රශ්න පත්‍ර/පිළිතුරු පත්‍ර/සටහන් ලබා ගැනීමට Past Papers Wiki වෙත පිවිසෙන්න

Past Papers Wiki



● வினா இல. **25** இற்கு விடையளிப்பதற்குப் பின்வரும் வரிப்படத்தைப் பயன்படுத்துக.



**25.** மேற்குறித்த வரிப்படத்தில் காட்டப்பட்டுள்ள பயிர்ச்செய்கை முறையை மிகச் சரியாக விளக்குவது
(1) தனிப் பயிர்ச்செய்கை முறை
(2) நிரல் இடைப் பயிர்ச்செய்கை முறை
(3) கிரமமான பயிர்ச்செய்கை முறை
(4) அஞ்சற் பயிர்ச்செய்கை முறை
(5) பல்படைப் பயிர்ச்செய்கை முறை

**26.** விலங்கு இனவிருத்தி தொடர்பான மூன்று கூற்றுகள் பின்வருமாறு.
A - சிறப்புத் தோற்ற தேர்வு (mass selection) மூலம் சுதேச பசுக்களின் பிறப்புரிமை இயலளவை இலகுவாக மேம்படுத்தலாம்.
B - கலப்புப் பிறப்பாக்கமானது பண்ணை விலங்குகளின் பிறப்புரிமை இயலளவை மேம்படுத்துவதற்காகப் பயன்படுத்தப்படும் ஒரு பொதுவான முறையாகும்.
C - கலப்புப் பிறப்பாக்கம் எப்போதும் கலப்புப் பிறப்பு உரணைத் தோற்றுவிக்கும்.
மேற்குறித்த கூற்றுகளில் சரியானது / சரியானவை
(1) A மாத்திரம்
(2) B மாத்திரம்
(3) C மாத்திரம்
(4) A, B ஆகியன மாத்திரம்
(5) A, C ஆகியன மாத்திரம்

**27.** கபிலநிற முட்டை இடும் கோழி வர்க்கம் / வர்க்கங்கள்
(1) கோல்டன் கொமற்
(2) ஷேவர் 288
(3) ஹைசெக்ஸ் பிரவுண், ஷேவர் 288
(4) வைற் லெகோன்
(5) ஹைலைன் வைற்

**28.** "தற்கால மற்றும் எதிர்கால பரம்பரைகளின் தேவைகளை நிறைவேற்றும் ஆற்றலுக்குப் பாதிப்பு ஏற்படாத வகையில் சமூகத்தின் நிகழ்கால உணவுத் தேவைகளை நிறைவேற்றிக் கொள்வதற்காக மேற்கொள்ளப்படும் விவசாயம்." மேற்குறித்த கூற்றினால் மிகச் சரியாக விளக்கப்படுவது
(1) காப்பு விவசாயம்
(2) பாரம்பரிய விவசாயம்
(3) பேண்தகு விவசாயம்
(4) மானாவாரி விவசாயம்
(5) சேதன விவசாயம்

**29.** ஒரு பொதுவான மண் வெட்டு முகத்தில்
(1) O வலயத்திலிருந்து நீர்முறை அரிப்புக்கு உட்படும் கார அயன்கள் A, B ஆகிய வலயங்களில் படிவடையும்.
(2) O, A ஆகிய வலயங்களிலிருந்து நீர்முறை அரிப்புக்கு உட்படும் கார அயன்கள் B, C ஆகிய வலயங்களில் படிவடையும்.
(3) O வலயத்திலிருந்து நீர்முறை அரிப்புக்கு உட்படும் கார அயன்கள் A வலயத்தில் படிவடையும்.
(4) A வலயத்திலிருந்து நீர்முறை அரிப்புக்கு உட்படும் கார அயன்கள் B வலயத்தில் படிவடையும்.
(5) A, B ஆகிய வலயங்களிலிருந்து நீர்முறை அரிப்புக்கு உட்படும் கார அயன்கள் C வலயத்தில் படிவடையும்.

**30.** விவசாயி ஒருவர் கூட்டெருக் குவியலைத் தயாரித்து ஒரு வாரத்தின் பின்னர் முனை கூரான மரத் தடியொன்றை கூட்டெருக் குவியலினுள் செலுத்தி அடிக்கடி பரீட்சிக்கின்றார். இச்செயன்முறை மேற்கொள்ளப்படுவது கூட்டெருவின்
(1) pH இனைப் பரீட்சிப்பதற்காகும்.
(2) வெப்பநிலையைப் பரீட்சிப்பதற்காகும்.
(3) உவர்தன்மையைப் பரீட்சிப்பதற்காகும்.
(4) C : N விகிதத்தைப் பரீட்சிப்பதற்காகும்.
(5) போசணைப் பதார்த்தங்களின் அளவைப் பரீட்சிப்பதற்காகும்.

[பக். 6 ஐப் பார்க்க

**31.** அமுக்கவடுகலன் ஒன்றின் மூலம் வளர்ப்பு ஊடகத்தைக் கிருமியழிக்கும்போது காணப்பட வேண்டிய வெப்பநிலை, அமுக்கம், காலவீச்சு என்பன முறையே
(1) 121 °C, 1.60 kg / $cm^2$, 15 - 20 நிமிடங்கள் ஆகும்.
(2) 100 °C, 1.60 kg / $cm^2$, 15 - 20 நிமிடங்கள் ஆகும்.
(3) 121 °C, 1.06 kg / $cm^2$, 15 - 20 நிமிடங்கள் ஆகும்.
(4) 112 °C, 1.06 kg / $cm^2$, 20 - 30 நிமிடங்கள் ஆகும்.
(5) 100 °C, 1.06 kg / $cm^2$, 20 - 30 நிமிடங்கள் ஆகும்.

**32.** மண்ணில் பொசுபரசு கிடைப்புத்தன்மை மிகக் குறைவான அளவில் காணப்படுவது pH வீச்சு
(1) 3.0 - 4.0 ஆகவிருக்கும் போதாகும்.
(2) 4.0 - 6.0 ஆகவிருக்கும் போதாகும்.
(3) 4.0 - 7.0 ஆகவிருக்கும் போதாகும்.
(4) 5.5 - 6.5 ஆகவிருக்கும் போதாகும்.
(5) 7.0 - 8.0 ஆகவிருக்கும் போதாகும்.

**33.** மண்ணின்றிய பயிர்ச்செய்கை தொடர்பான மூன்று கூற்றுகள் பின்வருமாறு.
A - நீர் பயன்படுத்தப்படும் அளவு குறைவு
B - பசளைப் பயன்பாடு அதிகம்
C - அனைத்துப் போசணைக் கூறுகளும் வெளியிலிருந்து வழங்கப்படும்.

மேற்குறித்த கூற்றுகளில் சரியானது / சரியானவை
(1) A மாத்திரம் (2) B மாத்திரம் (3) C மாத்திரம்
(4) A, B ஆகியன மாத்திரம் (5) A, C ஆகியன மாத்திரம்

**34.** பண்ணையொன்றின் மொத்தச் செலவு (TC) கீழே தரப்பட்டுள்ளது.
$TC = 100 + 2Q + Q^2$ Q என்பது உற்பத்தி அலகுகளின் எண்ணிக்கையாகும்.
Q = 5 எனின், நிலையான செலவு, மாறும் செலவு என்பன முறையே,
(1) 10, 3.5 ஆகும். (2) 10, 35 ஆகும். (3) 10, 135 ஆகும்.
(4) 100, 3.5 ஆகும். (5) 100, 35 ஆகும்.

**35.** மண்ணின் தோற்ற அடர்த்தி நேரடியாகப் பயன்படுத்தப்படுவது
(1) மண் கனிப்பொருள் அளவு பற்றி அறிந்து கொள்வதற்காகும்.
(2) மண் சேதனப் பொருள்களின் அளவு பற்றி அறிந்து கொள்வதற்காகும்.
(3) மண்ணின் இறுக்கத்தன்மை பற்றி அறிந்து கொள்வதற்காகும்.
(4) மண் கட்டமைப்பு பற்றி அறிந்து கொள்வதற்காகும்.
(5) மண் இழையமைப்பு பற்றி அறிந்து கொள்வதற்காகும்.

● பீடைகள், நோய்கள் என்பவற்றின் உயிரியல் முறைக் கட்டுப்பாட்டில் பயன்படுத்தப்படும் சில ஒட்டுண்ணிகள், இரைகௌவிகள், நோயாக்கிகள் கீழே தரப்பட்டுள்ளன. வினா இலக்கங்கள் **36, 37** என்பவற்றுக்கு விடையளிப்பதற்குப் பின்வரும் அங்கிகளைப் பயன்படுத்துக.

A - வைரசுகள்
B - நெமற்றோடுகள்
C - லேடிபேர்ட் வண்டுகள்
D - சிலந்திகள்
E - குளவிகள்

**36.** மேற்குறித்த அங்கிகளில் இரைகௌவிகளுக்கான உதாரணங்களாக அமைவன
(1) A, B ஆகியன மாத்திரம் (2) B, C ஆகியன மாத்திரம்
(3) C, D ஆகியன மாத்திரம் (4) A, C, D ஆகியன மாத்திரம்
(5) B, C, E ஆகியன மாத்திரம்

**37.** மேற்குறித்த அங்கிகளில் நோயாக்கிகளுக்கான உதாரணங்களாக அமைவன
(1) A, B ஆகியன மாத்திரம் (2) B, C ஆகியன மாத்திரம்
(3) C, D ஆகியன மாத்திரம் (4) A, C, D ஆகியன மாத்திரம்
(5) B, C, E ஆகியன மாத்திரம்

[பக். 7 ஐப் பார்க்க

අ.පො.ස උසස් පෙළ සියලුම විෂයන්ට අදාළ ප්‍රශ්න පත්‍ර/පිළිතුරු පත්‍ර/සටහන් ලබා ගැනීමට Past Papers Wiki වෙත පිවිසෙන්න

Past Papers Wiki



**38.** பண்ணை விலங்குகளின் உணவுச் சமிபாட்டுடன் தொடர்புடைய மூன்று கூற்றுகள் பின்வருமாறு.

A - காபோவைதரேற்றுகள் பிரதானமாக இரைப்பையில் சமிபாடடையும்.

B - நார்ப்பொருட்களின் சமிபாடு இரைமீட்கும் விலங்குகளில் மாத்திரமே இடம்பெறும்.

C - பொறிமுறைச் சமிபாடு மூலம் நுண்ணங்கிச் சமிபாடும் நொதியச் சமிபாடும் இலகுவாக்கப்படும்.

மேற்குறித்த கூற்றுகளில் சரியானது / சரியானவை

(1) A மாத்திரம்
(2) B மாத்திரம்
(3) C மாத்திரம்
(4) A, B ஆகியன மாத்திரம்
(5) B, C ஆகியன மாத்திரம்

**39.** வித்துக்களில் பௌதிக உறங்குநிலை நீக்கப்படுவது

(1) நீண்ட காலம் வித்துக்களைக் களஞ்சியப்படுத்தி வைத்திருப்பதன் மூலமாகும்.
(2) 1% ஜிபரெலிக் அமிலக் கரைசலில் 5 நிமிடங்கள் ஊறவைப்பதன் மூலமாகும்.
(3) வித்துக்களை 4°C வெப்பநிலையிலுள்ள குளிரூட்டியில் 12 மணித்தியாலங்கள் வைப்பதன் மூலமாகும்.
(4) வித்துறையை உரோஞ்சிய பின்னர் ஒரு இரவு முழுவதும் வித்துக்களை ஊறவைப்பதன் மூலமாகும்.
(5) வித்துக்களை 20 நிமிடங்கள் அளவில் பங்கசுநாசினிக் கரைசலில் ஊறவைப்பதன் மூலமாகும்.

**40.** கோரை வகைக்குரிய களைக்கான ஓர் உதாரணம்

(1) மஞ்சட் கோரை (*Cyperus iria*).
(2) கோழிச்சூடான் (*Echinochloa crus-galli*).
(3) கினிப்புல் (*Panicum maximum*).
(4) தொட்டாற்சுருங்கி (*Mimosa pudica*).
(5) பன்றி நெல் (*Oryza rufipogen*).

**41.** அண்மையில் இலங்கையின் பெரிய வெங்காயச் சந்தையானது பின்வரும் நிலைமைகளால் பாதிக்கப்பட்டுள்ளது.

A - பிரதானமாகப் பெரிய வெங்காயம் ஏற்றுமதி செய்யும் நாடுகளில் ஒன்று பெரிய வெங்காயம் ஏற்றுமதி செய்வதை நிறுத்தியுள்ளது.

B - உள்நாட்டு பெரிய வெங்காயம் நுகர்வோரின் வருமானம் வீழ்ச்சியடைந்துள்ளது.

மேற்குறித்த நிலைமைகளின் பெறுபேறாக,

(1) கேள்வியும் நிரம்பலும் வீழ்ச்சியடையும்.
(2) கேள்வியும் நிரம்பலும் அதிகரிக்கும்.
(3) கேள்வி மாத்திரம் அதிகரிக்கும்.
(4) கேள்வி அதிகரிக்கும் அத்தோடு நிரம்பல் குறைவடையும்.
(5) கேள்வி, நிரம்பல் ஆகிய இரண்டும் மாறாதிருக்கும்.

**42.** பட்டரின் விலை அதிகரித்தால் மாஜரீனின்

(1) கேள்வி வீழ்ச்சியடையும்.
(2) நிரம்பல் வளையி வலப்புறமாகப் பெயர்ச்சி அடையும்.
(3) கேள்வி வளையி வலப்புறமாகப் பெயர்ச்சி அடையும்.
(4) கேள்வி வளையி இடப்புறமாகப் பெயர்ச்சி அடையும்.
(5) சமனிலை விலை, அளவு என்பன மாறாது இருக்கும்.

**43.** பீனாறி (*Lantana camara*) இனைக் கட்டுப்படுத்த அறிமுகப்படுத்தப்பட்ட பூச்சி இனம்

(1) *Teloenemia scrupulosa*.
(2) *Neochetina eichhorniae*.
(3) *Paulinia acuminata*.
(4) *Cactoblastis cactorum*.
(5) *Cylas formicarius*.

**44.** சந்தைக் கட்டமைப்புகளின் நான்கு இயல்புகள் பின்வருமாறு.

A - பண்டங்களுக்கான பிரதியீட்டுப் பண்டங்கள் இல்லாதிருத்தல்.

B - வழங்குநர்கள் விதிக்கப்பட்ட விலையின் கீழ் செயற்படுவர்.

C - தொடர்ச்சியாக அதிக இலாபம் கிடைத்தல்.

D - வழங்குநர்களுக்கிடையே பரஸ்பர புரிந்துணர்வு காணப்படுதல்.

மேற்குறிப்பிட்டவற்றுள் தனியுரிமைச் சந்தைக் கட்டமைப்பொன்றில் காணப்படும் இயல்புகள்

(1) A, B ஆகியன மாத்திரம்.
(2) A, C ஆகியன மாத்திரம்.
(3) B, C ஆகியன மாத்திரம்.
(4) A, B, C ஆகியன மாத்திரம்.
(5) B, C, D ஆகியன மாத்திரம்.

[பக். 8 ஐப் பார்க்க

**45.** பாலுடன் ஒப்பிடும்போது கடும்புப் பாலில்
(1) புரதம் அதிகளவில் காணப்படும்.
(2) கனியுப்புக்கள் குறைவாகக் காணப்படும்.
(3) விற்றமின்கள் குறைவாகக் காணப்படும்.
(4) பால் வெல்லம் (இலக்ரோசு) அதிகளவில் காணப்படும்.
(5) மொத்த திண்மப் பதார்த்தங்கள் குறைவாகக் காணப்படும்.

**46.** ஒரு தாவரத்தில் அகப்பிறப்பாக்கப் பெற்றோர் இருவரையும் காட்டிலும் அதிக விளைச்சலை F1 பரம்பரை காட்டுகின்றது. இந்நிகழ்வு மிகச் சரியாக விளங்கப்படுத்தப்படுவது
(1) தலைமுறையுரிமை எனவாகும்.
(2) கலப்புப் பிறப்பு உரண் எனவாகும்.
(3) மெண்டலின் இரண்டாவது விதி எனவாகும்.
(4) பிறப்புரிமையமைப்பு மாறல் எனவாகும்.
(5) தோற்றவமைப்பு மாறல் எனவாகும்.

**47.** விலை உச்ச வரம்பு (price ceiling) தொடர்பான மூன்று கூற்றுகள் பின்வருமாறு.
A - விலை உச்ச வரம்பானது சமனிலை விலையை விட அதிகமாக உள்ளபோது வினைத்திறனுடையதாகக் காணப்படும்.
B - விலை உச்ச வரம்பானது சமனிலை விலையை விடக் குறைவாக உள்ளபோது வினைத்திறனுடையதாகக் காணப்படும்.
C - வினைத்திறனான விலை உச்ச வரம்புகள் காணப்படுதல் விவசாயப் பண்டங்களின் சந்தையில் பற்றாக்குறை ஏற்படுவதற்குக் காரணமாகும்.

மேற்குறிப்பிடப்பட்டவற்றுள் சரியான கூற்று / கூற்றுகள்
(1) A மாத்திரம் (2) B மாத்திரம் (3) C மாத்திரம்
(4) A, B ஆகியன மாத்திரம் (5) B, C ஆகியன மாத்திரம்

**48.** காலநிலை மாற்றங்களுக்கு அதிகளவில் பங்களிக்கும் பயிர்ச்செய்கை
(1) சோளம் (2) நெல் (3) கரட் (4) கரும்பு (5) தென்னை

**49.** குளோரோபில் தொகுப்பை ஒழுங்காக்கும் தாவர ஓமோன்
(1) ஒட்சின் (2) சைற்றோகைனின் (3) எதிலீன்
(4) ஜிபரலின் (5) அப்சிசிக் அமிலம்

**50.** இலங்கையில் அதிகமாகக் காணப்படும் விலங்குகளிலிருந்து மனிதனுக்குப் பரவும் (zoonotic) நோய்
(1) புருசலோசிஸ் (2) தொழுநோய் (3) டெங்கு
(4) மஞ்சள் காய்ச்சல் (5) சின்னம்மை நோய்

* * *

අ.පො.ස උසස් පෙළ සියලුම විෂයන්ට අදාළ ප්‍රශ්න පත්‍ර/පිළිතුරු පත්‍ර/සටහන් ඔබට ගැනීමට Past Papers Wiki වෙත පිවිසෙන්න

005009

AL/2023(2024)/08/T-II/Special

සියලු ම හිමිකම් ඇවිරිණි / முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved]

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம் இலங்கைப் பரீட்சைத் திணைக்களம் இலங்கைப் பரீட்சைத் திணைக்களம் இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka Department of Examinations, Sri Lanka Department of Examinations, Sri Lanka

**ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව**
**இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்**
**Department of Examinations, Sri Lanka**

**අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (උසස් පෙළ) විභාගය, 2023(2024)**
**கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தர)ப் பரீட்சை, 2023(2024)**
**General Certificate of Education (Adv. Level) Examination, 2023(2024)**

| | |
|---|---|
| කෘෂි විද්‍යාව | II (විශේෂ විභාගය) |
| **விவசாய விஞ்ஞானம்** | **II (விசேட பரீட்சை)** |
| Agricultural Science | II (Special Exam) |

**08 T II**

පැය තුනයි
**மூன்று மணித்தியாலம்**
*Three hours*

| | | |
|---|---|---|
| අමතර කියවීම් කාලය | - | මිනිත්තු 10 යි |
| **மேலதிக வாசிப்பு நேரம்** | - | **10 நிமிடங்கள்** |
| Additional Reading Time | - | 10 minutes |

**வினாத்தாளை வாசித்து, வினாக்களைத் தெரிவுசெய்வதற்கும் விடை எழுதும்போது முன்னுரிமை வழங்கும் வினாக்களை ஒழுங்கமைத்துக் கொள்வதற்கும் மேலதிக வாசிப்பு நேரத்தைப் பயன்படுத்துக.**

**சுட்டெண் :** ....................................

**அறிவுறுத்தல்கள் :**

* இவ்வினாத்தாள் **11** பக்கங்களில் **10** வினாக்களைக் கொண்டுள்ளது.
* இவ்வினாத்தாள் **A, B** என்னும் **இரண்டு** பகுதிகளைக் கொண்டது. **இரண்டு** பகுதிகளுக்கும் விடை எழுதுவதற்கு வழங்கப்பட்டுள்ள நேரம் **மூன்று மணித்தியாலங்களாகும்.**

**பகுதி A – அமைப்புக் கட்டுரை (பக்கங்கள் 2 - 10)**

* **எல்லா** வினாக்களுக்கும் **இவ்வினாத்தாளிலேயே** விடை எழுதுக.
* ஒவ்வொரு வினாவுக்கும் விடப்பட்டுள்ள இடத்தில் விடைகளை எழுதுக. கொடுக்கப்பட்டுள்ள இடம் உமது விடைகளுக்குப் போதுமானது என்பதையும் விரிவான விடைகள் **அவசியமற்றவை** என்பதையும் கவனத்திற் கொள்க.

**பகுதி B – கட்டுரை (11 ஆம் பக்கம்)**

* **நான்கு** வினாக்களுக்கு மாத்திரம் விடை எழுதுக. உமக்கு வழங்கப்படும் தாள்களை இதற்குப் பயன்படுத்துக. இவ்வினாத்தாளுக்கென வழங்கப்பட்ட நேர முடிவில் பகுதி **A** மேலே இருக்குமாறு **A, B** ஆகிய இரண்டு பகுதிகளையும் ஒன்றாகச் சேர்த்துக் கட்டிய பின்னர் மேற்பார்வையாளரிடம் கையளிக்குக.
* வினாத்தாளின் பகுதி **B** ஐ மாத்திரம் பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே எடுத்துச்செல்ல அனுமதிக்கப்படும்.

**பரீட்சகரின் பயன்பாட்டிற்கு மாத்திரம்**

| (08) விவசாய விஞ்ஞானம் - II | | |
|---|---|---|
| **பகுதி** | **வினா எண்** | **புள்ளிகள்** |
| **A** | **1** | |
| | **2** | |
| | **3** | |
| | **4** | |
| **B** | **5** | |
| | **6** | |
| | **7** | |
| | **8** | |
| | **9** | |
| | **10** | |
| **மொத்தம்** | | |

**மொத்தம்**

| | |
|---|---|
| இலக்கத்தில் | |
| எழுத்தில் | |

**குறியீட்டெண்கள்**

| | |
|---|---|
| விடைத்தாள் பரீட்சகர் 1 | |
| விடைத்தாள் பரீட்சகர் 2 | |
| புள்ளிகளைப் பரீட்சித்தவர் | |
| மேற்பார்வை செய்தவர் | |

030300000220110009

[பக் 2 ஐப் பார்க்க

## பகுதி A - அமைப்புக் கட்டுரை

**எல்லா** வினாக்களுக்கும் **இவ்வினாத்தாளிலேயே** விடை எழுதுக.
(ஒவ்வொரு வினாவுக்கும் **100** புள்ளிகள் உரித்தாகும்.)

இப்பகுதியில் எதனையும் எழுதுதல் ஆகாது

**1.** (A) இலங்கை விவசாயத்துறையின் அபிவிருத்திக்காக சேவைகளை வழங்கும் அரச நிறுவனம் ஒன்றையும் அரச சார்பற்ற நிறுவனம் ஒன்றையும் குறிப்பிடுக.

(i) அரச நிறுவனம் : ..............................

(ii) அரச சார்பற்ற நிறுவனம் : ..............................

(B) பூமியின் மேற்பரப்பு நீண்ட காலம் வெப்பமடைதல், பூகோள வெப்பமாதல் எனப்படும். இது பயிர் உற்பத்தியில் செல்வாக்குச் செலுத்துகின்றது.

(i) பயிர் உற்பத்தியில் பூகோள வெப்பமடைதலின் பாதகமான விளைவுகள் **இரண்டைக்** குறிப்பிடுக.

(1) ..............................

(2) ..............................

(ii) பூகோள வெப்பமடைதலை இழிவளவாக்குவதில் உதவும் விவசாய நடவடிக்கைகள் **இரண்டைக்** குறிப்பிடுக.

(1) ..............................

(2) ..............................

(C) பூகோள தரைவாழ் உயிர்ப்பல்வகைமையின் பாரிய பகுதியொன்று மண் அங்கிகளினால் பிரதிநிதித்துவப்படுத்தப்படுகின்றது.

(i) உடலின் அளவுக்கு ஏற்ப மண் அங்கிகள் வகைப்படுத்தப்படும் **மூன்று** தொகுதிகளைக் குறிப்பிடுக.

(1) ..............................

(2) ..............................

(3) ..............................

(ii) மண்ணில் நைத்திரேற்று அயன்கள் உருவாகும் செயன்முறையில் தொடர்புறும் **மூன்று** பற்றீரியாக்களின் பெயர்களைத் தருக.

(1) ..............................

(2) ..............................

(3) ..............................

(iii) மண் அங்கிகளின் குடித்தொகையை சிறப்பான மட்டத்தில் பேணுவதற்கு உதவும் விவசாய நடவடிக்கைகள் **இரண்டைக்** குறிப்பிடுக.

(1) ..............................

(2) ..............................

[பக் 3 ஐப் பார்க்க



අ.පො.ස උසස් පෙළ සියලුම විෂයන්ට අදාළ ප්‍රශ්න පත්‍ර/පිළිතුරු පත්‍ර/සටහන් ලබා ගැනීමට Past Papers Wiki වෙත පිවිසෙන්න

Past Papers Wiki



இப்பகுதியில் எதனையும் எழுததல் ஆகாது

(D) சிறப்பான வளர்ச்சிக்கு அவசியமான போசணைக் கூறுகள் கிடைக்கப்பெறாதவிடத்து தாவரங்களில் போசணைக் குறைபாடு ஏற்படுகின்றது. பின்வரும் ஒவ்வோர் போசணைக் குறைபாடு காரணமாக தாவரங்களில் தோன்றும் குறைபாட்டு அறிகுறிகள் **இரண்டு** வீதம் குறிப்பிடுக.

(i) நைதரசன் (N) : (1) ..............................................................................

(2) ..............................................................................

(ii) பொற்றாசியம் (K) : (1) ..............................................................................

(2) ..............................................................................

(iii) பொசுபரசு (P) : (1) ..............................................................................

(2) ..............................................................................

(E) வினாக்கள் (i), (ii) ஆகியவற்றுக்கு விடையளிப்பதற்குப் பின்வரும் உருவைப் பயன்படுத்துக.




(i) மேலுள்ள உருவில் காட்டப்பட்டுள்ள நிலம் பண்படுத்தும் உபகரணத்தின் பெயரைத் தருக.

..............................................................................

(ii) P, Q, R, S எனக் குறிப்பிடப்பட்டுள்ள பகுதிகளின் பெயர்களை எழுதி, அவ்வொவ்வொரு பகுதியினதும் தொழிற்பாட்டைக் குறிப்பிடுக.

| | பகுதியின் பெயர் | தொழிற்பாடு |
|---|---|---|
| (1) P | .................................... | .................................... |
| (2) Q | .................................... | .................................... |
| (3) R | .................................... | .................................... |
| (4) S | .................................... | .................................... |

100

005009

இப்பகுதியில் எதையும் எழுதுதல் ஆகாது

**2.** (A) சிறப்பான பயிர் வளர்ச்சியைப் பெற்றுக்கொள்வதற்கு விவசாய வயல்நிலங்களில் சரியான வடிகாலமைப்பினைப் பேணுதல் முக்கியத்துவம் பெறுகின்றது.

(i) நலிவான வடிகாலமைப்பினால் பயிர்களுக்கு ஏற்படும் பாதகமான விளைவுகள் **இரண்டைப்** பட்டியலிடுக.

(1) ....................................................................................................

(2) ....................................................................................................

(ii) நலிவான வடிகாலமைப்பினால் மண்ணின் இயல்புகளில் ஏற்படும் பாதகமான விளைவுகள் **இரண்டைக்** குறிப்பிடுக.

(1) ....................................................................................................

(2) ....................................................................................................

(iii) மண்ணின் வடிகாலமைப்பை மேம்படுத்துவதற்குப் பயன்படுத்தப்படும் நுட்பங்கள் **இரண்டைக்** குறிப்பிடுக.

(1) ....................................................................................................

(2) ....................................................................................................

(B) ஒளித்தொகுப்பு தொடர்பிலான அறிவு பயிர் விளைச்சலை அதிகரிப்பதற்கு முக்கியமானதாகும்.

(i) ஒளித்தொகுப்பின் முழுமையான செயன்முறையை விளக்குவதற்கு ஒரு எளிய சமன்பாட்டினை எழுதுக.

....................................................................................................

(ii) ஒளித்தொகுப்பில் செல்வாக்குச் செலுத்தும் **இரண்டு** பிரதான புறக் காரணிகளைக் குறிப்பிடுக.

(1) ....................................................................................................

(2) ....................................................................................................

(iii) பயிர்த் தாவரங்களில் ஒளித்தொகுப்பை மேம்படுத்துவதற்குப் பயன்படுத்தக்கூடிய **இரண்டு** நடவடிக்கைகளைக் குறிப்பிடுக.

(1) ....................................................................................................

(2) ....................................................................................................

(C) தாவர இனப்பெருக்கம் என்பது ஒரு குறித்த தாவர இனத்தின் தாவரங்களின் எண்ணிக்கையை அதிகரிக்கும் செயன்முறையாகும். பின்வரும் பயிர்களின் இனப்பெருக்கத்திற்கான மிகப் பொருத்தமான நடுகைப் பொருளைக் குறிப்பிடுக.

| பயிர் | நடுகைப் பொருள் |
|---|---|
| (i) வல்லாரை | .................................................. |
| (ii) சேப்பங் கிழங்கு (colocasia) | .................................................. |
| (iii) சிறகவரை | .................................................. |
| (iv) இஞ்சி | .................................................. |

[பக் 5 ஐப் பார்க்க

0000579

අ.පො.ස උසස් පෙළ සියලුම විෂයන්ට අදාල ප්‍රශ්න පත්‍ර/පිළිතුරු පත්‍ර/සටහන් ලබා ගැනීමට Past Papers Wiki වෙත පිවිසෙන්න

Past Papers Wiki



இப்பகுதியில் எதனையும் எழுதுதல் ஆகாது.

(D) பொருத்தமான நிபந்தனைகளின் கீழ் முளைப்பதற்கான ஆற்றலைக் கொண்டுள்ள ஒரு வித்து, வாழ்தகவுள்ள வித்து எனப்படும்.

(i) வித்துக்களின் வாழ்தகவில் செல்வாக்குச் செலுத்தும் புறக் காரணிகள் **இரண்டைப்** பட்டியற்படுத்துக.

(1) ........................................................................................................

(2) ........................................................................................................

(ii) வித்துக்களின் வாழ்தகவில் செல்வாக்குச் செலுத்தும் அகக் காரணிகள் **இரண்டைக்** குறிப்பிடுக.

(1) ........................................................................................................

(2) ........................................................................................................

(iii) வித்துக்களின் வாழ்தகவை அளவிடுவதற்குப் பயன்படுத்தக்கூடிய **இரண்டு** முறைகளைக் குறிப்பிடுக.

(1) ........................................................................................................

(2) ........................................................................................................

(E) அங்கி ஒன்றின் தோற்றவமைப்பைப் பாதிக்கும் **இரண்டு** பிரதான காரணிகளைக் குறிப்பிடுக.

(i) ........................................................................................................

(ii) ........................................................................................................

(F) ஆளுகைச் சூழல் விவசாயம் என்பது சூழல் காரணிகளை சிறப்பு மட்டத்தில் பேணுவதன் ஊடாகப் பயிர்ச்செய்கையை மேற்கொள்ளுதல் ஆகும்.

(i) ஆளுகைச் சூழல் விவசாயத்தில் கட்டுப்படுத்த வேண்டிய காற்றுக்குரிய சூழல் காரணிகள் **இரண்டைக்** குறிப்பிடுக.

(1) ........................................................................................................

(2) ........................................................................................................

(ii) ஆளுகைச் சூழல் விவசாயத்தில் கட்டுப்படுத்த வேண்டிய மண் சூழல் காரணிகள் **இரண்டைக்** குறிப்பிடுக.

(1) ........................................................................................................

(2) ........................................................................................................

(G) மண்ணின்றிய பயிர்ச்செய்கை என்பது மண் தவிர்ந்த ஏனைய ஏதேனும் ஊடகத்தில் பயிர்ச்செய்கை செய்யும் ஒரு முறையாகும். மண்ணின்றிய பயிர்ச்செய்கையில் பயன்படுத்தக்கூடிய திண்ம ஊடகங்களுக்கான **இரண்டு** உதாரணங்களைக் குறிப்பிடுக.

(i) ........................................................................................................

(ii) ........................................................................................................

100

005009

01030000220110009

இப்பகுதியில் எதனையும் எழுதுதல் ஆகாது.

3. (A) சிவிறி என்பது விவசாயப் பயிர்களுக்கு களைநாசினிகள், பீடைநாசினிகள், பசளைகள் என்பவற்றை சிவிறுவதற்குப் பயன்படுத்தும் ஒரு உபகரணமாகும். பயன்படுத்தப்படும் திரவத்தின் அளவுக்கு அமைய வலுத்தெளிகருவியின் பிரதான **மூன்று** வகைகளையும் பட்டியற்படுத்துக.

(i) ..........

(ii) ..........

(iii) ..........

(B) பற்றீரியா, பங்கசு, நெமற்றோடு, பைற்றோப்பிளாஸ்மா, வைரசு என்பன தாவரங்களில் நோய்களை ஏற்படுத்தும் நோயாக்கிகள் ஆகும்.

(i) தாவரங்களில் பின்வரும் நோய் அறிகுறிகளை ஏற்படுத்தும் மிகப் பொருத்தமான நோயாக்கியைக் குறிப்பிடுக.

(1) எரிவிரணம், வளையப் பொட்டுக்கள், பன்னிறப்படல், இலை சுருளல் : ..........

(2) மென்னழுகல், முடிச்சு : ..........

(3) இடத்தமைந்த புள்ளிகள், புற்றுநோய் (canker) : ..........

(ii) தாவரமொன்று அல்லது தாவரத்தின் ஒரு பகுதி அதன் இயல்பான நிலைமையிலிருந்து விலகுதல், தாவர நோய் எனப்படும்.

(1) வைரசு நோயை இனங்காண்பதற்குப் பயன்படுத்தக்கூடிய நவீன தொழினுட்ப முறை ஒன்றைக் குறிப்பிடுக.

..........

(2) காற்று, நீர் என்பன தவிர்ந்த தாவர நோய்கள் பரவலடையும் வேறு முறை ஒன்றைக் குறிப்பிடுக.

..........

(C) உணவொன்றில் காணப்படும் பிரதான போசணைக் கூறுகளின் வகைகள் **நான்கினைக்** குறிப்பிடுக.

(i) ..........

(ii) ..........

(iii) ..........

(iv) ..........

(D) உணவைக் கிருமியழித்தல், பாச்சர்முறைக்கு உட்படுத்தல் என்பவற்றுக்கிடையிலான பிரதான வேறுபாட்டைக் குறிப்பிடுக.

..........

..........

..........

(E) பின்வரும் உணவு வகைகளுக்கான மிகப் பொருத்தமான பொதியிடு பொருளைக் குறிப்பிடுக.

(i) பால் மா : ..........

(ii) பட்டர் : ..........

[பக் 7 ஐப் பார்க்க



අ.පො.ස උසස් පෙළ සියලුම විෂයන්ට අදාළ ප්‍රශ්න පත්‍ර/පිළිතුරු පත්‍ර/සටහන් ලබා ගැනීමට Past Papers Wiki වෙත පිවිසෙන්න

இப்பகுதியில் எதனையும் எழுதுதல் ஆகாது

(F) சில பழ வகைகளில் முதிர்ச்சிச் சுட்டியாக தன்னீர்ப்பு பயன்படுத்தப்படுகின்றது. மாணவனொருவன் புதிதாக அறுவடை செய்யப்பட்ட சில மாம்பழங்களை ஒரு நீரப் பாத்திரத்தினுள் இட்ட பின்னர் அவற்றில் சில நீரில் மிதப்பதையும் ஏனையவை நீரில் அமிழ்வதையும் அவதானித்தான்.

(i) முழுமையாக முதிர்ச்சியடைந்த மாம்பழங்கள் எவை எனக் குறிப்பிடுக.

..........................................................................................................

(ii) மாம்பழங்களின் முதிர்ச்சித் தன்மையை அளவிடுவதற்குப் பயன்படுத்தக்கூடிய வேறு **இரண்டு** முறைகளைக் குறிப்பிடுக.

(1) ..........................................................................................................

(2) ..........................................................................................................

(G) பழங்கள், மரக்கறிகளில் அறுவடைக்குப் பிந்திய இழப்புகள் ஏற்படுவதில் செல்வாக்குச் செலுத்தும் உடற்றொழிலியல் காரணிகள் **இரண்டைக்** குறிப்பிடுக.

(i) ..........................................................................................................

(ii) ..........................................................................................................

(H) பழுத்தல் செயன்முறையின்போது இரண்டு வகையான பழங்களின் சுவாசக் கோலங்கள் பின்வரும் வரிப்படத்தில் காட்டப்பட்டுள்ளது. வினா இலக்கங்கள் (i), (ii) ஆகியவற்றுக்கு விடையளிப்பதற்கு இவ் வரிப்படத்தைப் பயன்படுத்துக.




P, Q ஆகிய வகைகளுக்குரிய பழங்களை அவற்றின் சுவாசக் கோலத்திற்கு ஏற்ப பெயரிட்டு, அவ் ஒவ்வொரு வகைக்குமான ஒவ்வோர் உதாரணம் வீதம் குறிப்பிடுக.

| | சுவாசக் கோலத்திற்கு ஏற்ப பழங்களின் வகை | உதாரணம் |
|---|---|---|
| (i) P | .................................... | .................................... |
| (ii) Q | .................................... | .................................... |

(I) 'தேர்வு', 'கலப்புப் பிறப்பாக்கம்' என்பன பண்ணை விலங்குகளின் பிறப்புரிமை இயலளவை மேம்படுத்துவதற்காகப் பயன்படுத்தப்படும் இரு பிரதான முறைகளாகும்.

(i) தேர்வுடன் ஒப்பிடும்போது கலப்புப் பிறப்பாக்கத்தில் காணப்படும் நன்மைகள் **இரண்டைக்** குறிப்பிடுக.

(1) ..........................................................................................................

(2) ..........................................................................................................

(ii) விலங்குகளின் அகப்பிறப்பாக்கம் என்பதால் கருதப்படுவது யாது?

..........................................................................................................

..........................................................................................................

100

[பக் 8 ஐப் பார்க்க

இப்பகுதியில் எதனையும் எழுதுதல் ஆகாது.

**4.** (A) விலங்குகளின் உடலினுள் போசணைக் கூறுகள் பல்வேறு தொழிற்பாடுகளைப் புரிகின்றன. பண்ணை விலங்கு உணவுகளில் காணப்படும் பின்வரும் போசணைக் கூறுகளின் பிரதான தொழிற்பாட்டைக் குறிப்பிடுக.

| போசணைக் கூறு | பிரதான தொழிற்பாடு |
|---|---|
| (i) மாப்பொருள் | ................................................ |
| (ii) புரதம் | ................................................ |
| (iii) Ca மற்றும் P | ................................................ |
| (iv) B விற்றமின்கள் | ................................................ |

(B) இலங்கையில் காணப்படும் சில மாட்டு வர்க்கங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

பிரீஷியன், சிவப்பு சிந்தி, உள்நாட்டு மாடுகள், சகிவால்

கீழே தரப்பட்டுள்ள ஒவ்வொரு பண்ணைக்கும் மிகப் பொருத்தமான மாட்டு வர்க்கத்தை, மேற்குறிப்பிட்ட மாட்டு வர்க்கங்களிலிருந்து தெரிவுசெய்து எழுதுக.

(i) பொலன்னறுவைப் பிரதேசத்தில் அமைந்துள்ளதும் விலங்குகளுக்கு வெட்டியூட்டும் புல் உணவை வழங்குவதுமான பண்ணை :

................................................................................................

(ii) பதுளைப் பிரதேசத்தில் அமைந்துள்ளதும் செறிவு முறையில் விலங்கு வளர்ப்பு இடம்பெறுவதுமான பண்ணை :

................................................................................................

(iii) அநுராதபுரம் பிரதேசத்தில் அமைந்துள்ளதும் விரிவான முறையில் விலங்கு வளர்ப்பு இடம்பெறுவதுமான பண்ணை :

................................................................................................

(C) வினா இலக்கங்கள் (i), (ii) ஆகியவற்றுக்கு விடையளிப்பதற்கு கீழுள்ள கோழியின் உணவுக் கால்வாய்த் தொகுதியின் வரிப்படத்தைப் பயன்படுத்துக.




P, Q எனக் காட்டப்பட்டுள்ள பகுதிகளின் பெயர்களைக் குறிப்பிட்டு, அவ்வொவ்வொரு பகுதியினதும் பிரதான தொழிற்பாட்டைக் குறிப்பிடுக.

| | பகுதியின் பெயர் | பிரதான தொழில் |
|---|---|---|
| (i) P | .................................... | .................................... |
| (ii) Q | .................................... | .................................... |

[பக் 9 ஐப் பார்க்க

0000578

අ.පො.ස උසස් පෙළ සියලුම විෂයන්ට අදාළ ප්‍රශ්න පත්‍ර/පිළිතුරු පත්‍ර/සටහන් ලබා ගැනීමට Past Papers Wiki වෙත පිවිසෙන්න

(D) விவசாயி ஒருவர் உருளைக்கிழங்கு பயிர்ச்செய்கையில் ஈடுபட எதிர்பார்த்திருக்கும் அதேவேளை உச்ச இலாபத்தைப் பெற்றுக்கொள்வதற்கும் திட்டமிடுகின்றார். (i) தொடக்கம் (v) வரையான வினாக்களுக்கு விடையளிப்பதற்குப் பின்வரும் வரிப்படத்தைப் பயன்படுத்துக.

இப்பகுதியில் எதனையும் எழுதுதல் ஆகாது.




(i) X, Y ஆகிய அச்சுக்களின் பெயர்களைத் தருக.

(1) X ..........................................................................................

(2) Y ..........................................................................................

(ii) P, Q, R ஆகிய **மூன்று** வளையிகளின் பெயர்களைத் தருக.

(1) P ..........................................................................................

(2) Q ..........................................................................................

(3) R ..........................................................................................

(iii) S, T, U ஆகிய வலயங்களில் மிகவும் விளைதிறன் வாய்ந்த வலயம் எது?

..........................................................................................

(iv) மேலே வினா இல (iii) இல் வழங்கிய விடைக்கான **இரண்டு** காரணங்களைக் குறிப்பிடுக.

(1) ..........................................................................................

(2) ..........................................................................................

(v) இலாபத்தைக் கணிப்பிடுவதற்குத் தேவையான ஏனைய முக்கிய தரவுகள் **இரண்டைக்** குறிப்பிடுக.

(1) ..........................................................................................

(2) ..........................................................................................

[பக் 10 ஐப் பார்க்க

(E) காப்பு விவசாயத்தில் விளைச்சல் நிலத்தின் மீதான பாதிப்புகள் இழிவளவாகும் அதேவேளை உயிர்ப் பல்வகைமை பாதுகாக்கப்படுகின்றது.

(i) நிலத்தில் நீர்க் காப்புச் செய்யப்படக்கூடிய **இரண்டு** முறைகளைக் குறிப்பிடுக.

(1) ..........................................................................................

(2) ..........................................................................................

(ii) நிலத்தில் போசணைக் கூறுகள் காப்புச் செய்யப்படக்கூடிய **இரண்டு** முறைகளைக் குறிப்பிடுக.

(1) ..........................................................................................

(2) ..........................................................................................

(iii) நிலத்தில் உயிர்ப் பல்வகைமை காப்புச் செய்யப்படக்கூடிய **இரண்டு** முறைகளைக் குறிப்பிடுக.

(1) ..........................................................................................

(2) ..........................................................................................

100

* *

[பக் 11 ஐப் பார்க்க



අ.පො.ස උසස් පෙළ සියලුම විෂයන්ට අදාල ප්‍රශ්න පත්‍ර/පිළිතුරු පත්‍ර/සටහන් ලබා ගැනීමට Past Papers Wiki වෙත පිවිසෙන්න

Past Papers Wiki



ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව / இலங்கைப் பரீட்சைத் திணைக்களம் / Department of Examinations, Sri Lanka
සියලු ම හිමිකම් ඇවිරිණි / முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved]

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (උසස් පෙළ) විභාගය, 2023 (2024)
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தர)ப் பரீட்சை, 2023 (2024)
General Certificate of Education (Adv. Level) Examination, 2023 (2024)

| | | |
|---|---|---|
| කෘෂි විද්‍යාව<br>விவசாய விஞ்ஞானம்<br>Agricultural Science | II (විශේෂ විභාගය)<br>II (விசேட பரீட்சை)<br>II (Special Exam) | 08 T II |

## பகுதி B - கட்டுரை

**அறிவுறுத்தல்கள் :**

- **நான்கு** வினாக்களுக்கு மாத்திரம் விடை எழுதவும்.
- தேவையான இடங்களில் தெளிவான பெயரிடப்பட்ட வரிப்படங்கள் வரைக.

(ஒவ்வொரு வினாவுக்கும் **150** புள்ளிகள் வழங்கப்படும்)

**5.** (i) உணவு பழுதடைதலில் நீரின் செயற்படுதிறனின் பாதிப்பினை விபரிக்குக.

(ii) மண் வளியின் அளவிலும் கூறுகளிலும் செல்வாக்குச் செலுத்தும் காரணிகளை விபரிக்குக.

(iii) பயிர் உற்பத்தியில் மழைவீழ்ச்சியின் மாறலால் ஏற்படும் தாக்கத்தை விளக்குக.

**6.** (i) மரக்கறிகளின் அறுவடைக்குப் பிந்திய இழப்புக்களில் தாக்கம் செலுத்தும் அறுவடைக்கு முந்திய காரணிகளை விவரிக்குக.

(ii) தாவர போசணைக் கூறுகளை வழங்கலுடன் தொடர்பான லீபீக்கின் இழிவு விதியினை விளக்குக.

(iii) பாதுகாக்கப்பட்ட மனைகளில் பயிர்செய்கை மேற்கொள்வதன் முக்கியத்துவத்தை விபரிக்குக.

**7.** (i) விவசாய உற்பத்தியில் ஏற்படும் இழப்புகளை ஈடுசெய்வதில் விவசாயக் காப்புறுதியின் முக்கியத்துவத்தை விபரிக்குக.

(ii) சில பயிர்களை நாற்றுமேடையில் வளர்ப்பதன் முக்கியத்துவத்தை விபரிக்குக.

(iii) பயிர் உற்பத்தியில் ஒளியின் செறிவு, கால அளவு, தரம் என்பன தாக்கம் செலுத்தும் விதத்தை விளக்குக.

**8.** (i) விவசாயப் பண்டங்களின் நிரம்பலினதும் கேள்வியினதும் தன்மையை விளக்குக.

(ii) பீடை முகாமைத்துவத்தில் பயன்படுத்தப்படும் பல்வேறு பயிராக்கவியல் முறைகளை விபரிக்குக.

(iii) முட்டையிடும் வகைக்குரிய ஒரு நாள் வயதுக் கோழிக் குஞ்சுகளை மூன்று மாத காலம் வரை வளர்க்கும் முறையினை விளக்குக.

**9.** (i) பயிர் நிலங்களுக்கு நீர்ப்பாசனம் செய்வதற்குப் பொருத்தமான நீர் முதல் ஒன்றைத் தெரிவுசெய்யும்போது கவனத்திற் கொள்ள வேண்டிய விடயங்களை விபரிக்குக.

(ii) உயர் தரத்திலான பாலைப் பெற்றுக்கொள்வதற்கு பசுவிலிருந்து பால் கறக்கும்போது பின்பற்ற வேண்டிய படிமுறைகளை காரணங்களுடன் சரியான ஒழுங்கில் விபரிக்குக.

(iii) பயிர் தாபித்தலின்போது ஆரோக்கியமான விதைகளைத் தெரிவுசெய்வதன் முக்கியத்துவத்தை விபரிக்குக.

**10.** (i) மானாவாரிப் பயிர்ச்செய்கையின் வெவ்வேறு படிமுறைகளை விபரிக்குக.

(ii) வயல் நிலங்களில் பீடைகொல்லிகளைப் பயன்படுத்தும்போது பின்பற்ற வேண்டிய பாதுகாப்பு நடைமுறைகளை விளக்குக.

(iii) தண்டுத் துண்டங்களின் மூலம் தாவரங்கள் இனப்பெருக்கம் செய்யப்படும்போது கவனத்தில் கொள்ளப்பட வேண்டிய காரணிகளை விளக்குக.

* * *

LOL Book Store

වාරෙටම ඕන කරන පොත් එකපාර
ඕඩර් කරලා දැන් ගෙදරටම ගෙන්වා ගන්න

# 25% OFF ALL BOOKS

**Including Exercise Books, CR Books, and B5 Books**



**ඕනෙම අභ්‍යාස පොතකට 25%ක විශේෂ වට්ටමක්**

## ORDER BOOKS FROM LOL BOOKS STORE

0372060110 WWW.LOL.LK

071 777 4440 (WhatsApp)

**Cash On Delivery Available**

# ORDER A/L TERM TEST PAPERS, SHORT NOTES, WORKBOOKS & REVISION BOOKS

SINHALA, ENGLISH & TAMIL MEDIUM



## LOL BOOK STORE

CASH ON DELIVERY AND KOKO PAYMENT AVAILABLE

0717774440 (WHATSAPP)

WWW.LOL.LK